தேசியப் பண்

சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.

1. மலேசியாவின் தேசியப் பண் எது?

அ. ஜாலூர் கெமிலாங்

ஆ. நெகாராகூ

இ. ருகுன் நெகாரா

ஈ. கோட் சேஃவ் தி குவின்

2. நெகாராகூ தேசியப் பண் எந்த ஆண்டில் உருவாக்கப்பட்டது?

அ. 1948

ஆ. 1955

இ. 1957

ஈ. 1963

3. சுதந்திரத்திற்கு முன் மலாயாவின் தேசியப் பண்ணாக விளங்கியது எது?

அ. நெகாராகூ

ஆ. கோட் சேஃவ் தி குவின்

இ. ஜாலூர் கெமிலாங்

ஈ. ருகுன் நெகாரா

4. தேசியப் பண் உருவாக்கும் போட்டியில் எத்தனை பாடல்கள் கிடைக்கப்பெற்றன?

அ. 154

ஆ. 254

இ. 414

ஈ. 514

LIVEWORKSHEETS

5. தேசியப் பண் தேர்வுக் குழுவிற்குத் தலைமை தாங்கியவர் யார்?

அ. துங்கு அப்துல் ரஹ்மான் புத்ரா அல் ஹஜ்

ஆ. துன் அப்துல் ரசாக்

இ. துன் ஹுசேன் ஒன்

ஈ. துன் டாக்டர் மகாதீர் முகமது

6. தேசியப் பண்ணின் மெட்டு எந்த மாநிலத்தின் அதிகாரப்பூர்வப் பாடலிலிருந்து பெறப்பட்டது?

அ. பேராக்

ஆ. பகாங்

இ. கெடா

ஈ. மலாக்கா

7. நெகாராகூ ஒலிபரப்பட்டபோது என்ன நிகழ்வு நடைபெற்றது?

அ. தேசிய அருங்காட்சியகம் திறக்கப்பட்டது

ஆ. கூட்டரசு மலாயாவின் கொடி ஏற்றப்பட்டது

இ. புதிய அரசர் முடிசூட்டப்பட்டார்

ஈ. நாடாளுமன்றம் திறக்கப்பட்டது

8. தேசியப் பண் எதன் அடையாளமாக விளங்குகிறது?

அ. நாட்டின் ஒற்றுமை மற்றும் இறையாண்மை

ஆ. நாட்டின் பொருளாதாரம்

இ. நாட்டின் சுற்றுலாத்துறை

ஈ. நாட்டின் விளையாட்டுத்துறை

9. தேசியப் பண்ணின் வரிகள் எதை வேண்டுகின்றன?

அ. மக்கள் வெளிநாடுகளுக்குச் செல்ல வேண்டும்

ஆ. மக்கள் தனித்தனியாக வாழ வேண்டும்

இ. மக்கள் ஒற்றுமையுடன் வாழவும் அரசர் நல்வாழ்வு பெறவும் வேண்டும்

LIVEWORKSHEETS

10. தேசியப் பண்ணின் பொருளுக்கு மிகவும் பொருத்தமான கூற்று எது?

அ. நாட்டின் வளங்களை மட்டும் போற்றுதல்

ஆ. மக்களின் தனிப்பட்ட வெற்றியை மட்டும் கொண்டாடுதல்

இ. நாட்டின் ஒற்றுமையையும் அரசரின் நல்வாழ்வையும் வேண்டுதல்

ஈ. நாட்டின் வரலாற்றை மட்டும் விவரித்தல்

11. தேசியப் பண் பாடும்போது நாம் எவ்வாறு நிற்க வேண்டும்?

அ. கைகளை அசைத்துக்கொண்டு நிற்க வேண்டும்.

ஆ. நேராக நிமிர்ந்து நிற்க வேண்டும்.

இ. பேசிக்கொண்டு நிற்க வேண்டும்.

ஈ. ஓடிக்கொண்டு இருக்க வேண்டும்.

12. தேசியப் பண் பாடும்போது நாம் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும்?

அ. விளையாட வேண்டும்.

ஆ. சிரித்துக்கொண்டிருக்க வேண்டும்.

இ. மரியாதையுடன் நடந்துகொள்ள வேண்டும்.

ஈ. மற்றவர்களுடன் பேச வேண்டும்.

13. தேசியப் பண் பாடும்போது நாம் எதனைச் செய்ய வேண்டும்?

அ. கவனத்துடன் தேசியப் பண்ணைப் பாட வேண்டும்.

ஆ. கைப்பேசியைப் பயன்படுத்த வேண்டும்.

இ. மற்றவர்களைக் கேலி செய்ய வேண்டும்.

ஈ. அங்கும் இங்கும் நடக்க வேண்டும்.

LIVEWORKSHEETS

14. தேசியப் பண் பாடும்போது எதனைச் செய்யக்கூடாது?

அ. நேராக நிற்பது

ஆ. மரியாதை செலுத்துவது

இ. கவனத்துடன் பாடுவது

ஈ. பேசிக்கொண்டிருப்பது

15. தேசியப் பண் பாடும்போது நாம் ஏன் மரியாதை செலுத்த வேண்டும்?

அ. நாட்டின் ஒற்றுமையையும் இறையாண்மையையும் மதிப்பதற்காக
ஆ. விளையாடுவதற்காக

இ. நண்பர்களுடன் பேசுவதற்காக

ஈ. வகுப்பறையை விட்டு வெளியேறுவதற்காக

LIVEWORKSHEETS